செ.வெ.எண்:79 நாள்: 26.08.2021

தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக, திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆவணித் திருவிழாவை முன்னிட்டு 27.08.2021 முதல் 05.09.2021 வரை பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதி இல்லை - மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ் இ.ஆ.ப. அவர்கள் தகவல்

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தொற்று பரவல் காரணமாக தமிழ்நாட்டில் கூடுதல் தளர்வுகள் இன்றி மேலும் இரண்டு வாரங்கள் ஊரடங்கு நீட்டிப்பு செய்து அறிவித்துள்ளார். அதனடிப்படையில், கொரோனா தொற்று தடுப்பு விதிமுறைகளை கண்டிப்புடன் நடைமுறைபடுத்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறைக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

தூத்துக்குடி மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் கொரோனா நோய்த் தொற்று சூழ்நிலைகளை கருத்தில்கொண்டும், தமிழக அரசு தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 2021ம் ஆண்டு ஆவணித் திருவிழாவை முன்னிட்டு அதிக அளவிலான பக்தர்கள் கூடுவார்கள் என்பதால் கொரோனா நோய் தொற்று பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 27.08.2021 முதல் 05.09.2021 முடிய திருக்கோயிலில் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வதற்கு அனுமதி இல்லை. திருக்கோயிலில் ஆகம விதிப்படி அனைத்து நிகழ்வுகளும் திருக்கோயில் பணியாளர்கள் மூலம் நடைபெறும். ஆவணித் திருவிழா முக்கிய நிகழ்வுகளை பக்தர்கள் வீட்டிலிருந்து இணையதளம் வாயிலாக (You Tube) காணும் வகையில் திருக்கோயில் நிர்வாகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே பக்தர்கள் வீட்டில் இருந்தே சுவாமி தரிசனம் செய்து மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தூத்துக்குடி.